Produced by Sydney West Area Health Service,
Multicultural Health Network & NSW Multicultural
Health Communication Service.



# புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு மருந்தூசிகள் – ஏன் அவை அவசியம்?

பெற்றோர்கள் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்றப்படவேண்டிய இரு மருந்தூசிகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். இதில் ஒன்று ஒரு விசேட வைற்றமின் (வைற்றமின் கே) மருந்தூசி. இது வைற்றமின் கே பற்றாக்குறையால் குருதி வழிதல் (அல்லது வி கே டி பி) என்றழைக்கப்படும் அருமையான ஆனால் கடுமையான உடல்நலக் கேட்டை தவிர்க்க உதவி செய்யும். அடுத்த மருந்தூசி குழந்தைகளுக்கு ஈரற் குலை நோய் வராமல் தடுக்கும் ஈரல் அழற்சி பி என்றழைக்கபடுவதாகும். குழந்தைகள் பிறந்தபின் இவ்விரு மருந்தூசிகளையும் வைத்தியசாலையில் ஏற்ற முடியும்.

## குழந்தைகளுக்கு ஏன் வைற்றமின் கே தேவைப்படுகிறது?

போதுமான அளவு வைற்றமின் கே இல்லாவிட்டால் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு வி கே டி பி நோய் தாக்கும் அபாயம் உண்டு. இது கடுமையான குருதி வெளியேற்றத்தை உண்டு பண்ணி மூளையையும் பாதிக்கக்கூடும்.

## எல்லாக் குழந்தைகளுக்கும் வைற்றமின் கே தேவைப்படுமா?

ஆம் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் உடலில் வி கே டி பி ஐத் தவிர்ப்பதற்கு போதுமான அளவு வைற்றமின் கே இருக்காது. ஆனால் ஆறு மாத வயதையடையும் போது அநேகமாக அவர்களது உடல் அவர்களுக்குத் தேவையான அளவை உற்பத்தி செய்யும்.

## வைற்றமின் கே எப்போதும் மருந்தூசினால் தான் கொடுக்கபடுகிறதா?

இது மருந்தூசியின் மூலம் அல்லது வாயினூடாக கொடுக்க முடியும். மருந்தூசியின் மூலம் கொடுப்பது கூடிய வசதியளிக்கும் ஏனென்றால் ஒரு முறை ஏற்றிய மருந்து பல மாங்களுக்குப் போதுமானதாக இருக்கும்.

குழந்தைகளுக்கு மருந்தூசிகள் தேவை அவர்கள்:

- பருவமுறாதிருந்தல் அல்லது சுகயீனமுற்றிருந்தால்
- தாய்மார் கர்ப்பமாயிருக்கும்போது காக்காய் வலிப்பு, இரத்தம் உறைதல், மற்றும் சயரோகம் ஆகிய நோய்களுக்கு மருந்துகள் பாவித்திருந்தால் (நீங்கள் இந்த மருந்துகளில் எதையாவது பாவித்திருந்தால் உங்களது வைத்தியருக்கு அல்லது மருத்துவச்சிக்கு கூறுங்கள்).

வைற்றமின் கே வாயினூடாக் கொடுக்கலாம் ஆனால் அதன் பலன் நீண்ட காலத்திற்கு நீடிக்காது. இதன் கருத்து குழந்தைக்கு மூன்று தரங்கள் புறம்பாகக் கொடுக்க வேண்டும்:

- பிறந்தவுடன்
- பிறந்த மூன்று அல்லது நான்கு நாட்களின் பின்
- நாலு வார வயதையடையும் போது

## குறிப்பு:

மூன்றாவது தரம் கொடுப்பதை பெற்றோர்கள் நினைவில் கொள்வது மிகவும் முக்கியம்! இது இல்லாமல் முற்றாகப் பாதுகாக்கப்பட மாட்டார்கள்.

ஒவ்வொருமுறை கொடுக்கும் போதும் குழந்தை வாந்தி எடுத்தால் திரும்பவும் கொடுக்க வேண்டும்.

## வைற்றமின் கே கொடுப்பது ஏதும் பக்க விளைவுகளை ஏற்படுத்துமா?

அவுஸ்திரேலியவில் குழந்தைகளுக்கு 1980 ம் ஆண்டு முதல் வைற்றமின் கே கொடுக்கப்படுகிறது. வைத்திய அதிகாரிகள் வைற்றமின் மருந்தூசிகள் பாதுகாப்பானது என்று நம்புகிறார்கள். ஆயினும் ஒரு ஆய்வின்படி குழந்தைப்பருவ புற்று நோயிற்கும் வைற்றமின் கே மருந்தூசிகளுக்கும் தொடர்பு இருக்கிறது என்று கூறுகிறது அதேநேரம் வேறு ஆறு ஆய்வுகள் தொடர்புகள் இல்லை என்று கூறுகின்றன.

## எனது குழந்தைக்கு வைற்றமின் கே கொடுப்பதற்கு நான் இணங்க வேண்டுமா?

இது உங்களது விருப்பம். ஆனால் வைத்தியர்கள் எல்லாக் குழந்தைகளுக்கும் வைற்றமின் கே கொடுக்கவேண்டும் என்று கடுமையாக அறிவுறுத்துகிறார்கள். இவர்களில் சுகயீனமுற்ற குழந்தைகள் அல்லது அறுவைச் சிகிச்சை (ஆண்களின் பிறப்புறுப்பின் நுனித்தோல் அகற்றல் உட்பட) செய்யும் குழந்தைகள் உட்பட. வைற்றமின் கே கொடுப்பதை எதிர்க்கும் பெற்றோர்கள் வி கே டி பி இன் நோய்குறிகளை எச்சரிக்கையுடன் பார்க்க வேண்டும். இவை பின்வருமாறு:

- காரணமற்று இரத்தம் வழிதல் அல்லது கன்றிய காயங்கள்
- மூன்று வார வயதையடைந்த பின் தோல் அல்லது கண்களின் வெள்ளைப் பகுதிகள் மஞ்சல் நிறமாக மாறுதல்

இப்படியான நோய்குறிகளுடைய குழந்தைகள் வைத்தியரைப் பார்வையிடவேண்டும் (அவர்களுக்கு வைற்றமின கே கொடுத்திருந்தாலும் கூட).

## ஏன் குழந்தைகளுக்கு ஈரல் அழற்சி பி (hepatitis B) நோய்தடை தேவை?

ஈரல் அழற்சி பி ஒரு கடுமையான நோய் இது ஈரலை ஒரு விசக் கிருமி பாதிப்பதால் ஏற்படுகிறது. இந்த நோயுடைய சிலருக்கு ஒரு விதமான நோய்குறிகளும் இருக்காது அல்லது மிதமான நோய்குறிகள் மட்டுமெ இருக்கும். ஆனால் இந்த நோயினால் பாதிக்கப்பட்ட 25 சதவீதமானவர்கள் பிற் காலத்தில் கடுமையான ஈரல் நோயைப் பெறுகிறார்கள் விசேடமாக அவர்கள் சிறுவர்களாக இருந்த போது அவர்களுக்கு ஈரல் அழற்சி பி நோய் பற்றி இருந்தால். இதைத் தவிர்க்க நோய்த்தடை உதவி செய்யும்.

## ஏப்படி ஈரல் அழற்சி பி நோய் பரவுகிறது?

இந்த விசக் கிருமிகள் உடலிலுள்ள ஊறல் நீரில் (இரத்தம், எச்சில், மற்றும் விந்து) வசிக்கின்றன. குழந்தைகளின் தாய்மாருக்கு ஈரல் அழற்சி பி இருந்தால் அக் குழந்தைகள் பிறக்கும்போது இந் நோய் தொற்றும் அபாயம் மிகக் கூடுதலாக இருக்கும்.

ஈரல் அழற்சி நோய் பரவும் வேறு வழிகள்

- நோய் தொற்றி ஒரு நபரின் இரத்தம் உங்களது இரத்தத்துடன் கலந்தால். இது: வெட்டுகள் அல்லது கீறல்கள் மூலம் தொடர்பு; போதை மருந்துகள் ஊசி மூலம் ஏற்றும் போது தொற்றிய ஊசிகள் மற்றும் பீற்றுக் குழல்களுடன் தொடர்பு; தொற்றிய கருவிகள் உடல் துளைப்பதற்கு உபயோகிக்கப்படுவது போன்றவற்றுடன் தொடர்பு
- நோய் தொற்றிய ஒரு நபருடன் பாலியல் தொடர்பு

## ஏன் குழந்தைகள் பிறந்தவுடன் நோய்த்தடை செய்யவேண்டும்?

நோய்தடை முடியுமானவரை பயனுள்ளதாக இருப்பதை உறுதிசெய்வதற்கு பிறப்பின் பின் எவ்வளவு சீக்கரதத்தில் செய்யமுடியுமோ அவ்வளவு சீக்கரத்தில் ஈரல் அழற்சி பி நோய்த்தடை செய்வது முக்கியம். குழந்தைகளுக்கு மேலும் மூன்று ஈரல் அழற்சி பி மருந்தூசிகள் தேவைப்படும் – இரண்டு மாதங்கள், நாலு மாதங்களில், மற்றும் 12 மாதங்கள்

SYDNEY WEST
Area Health Service

Produced by Sydney West Area Health Service,
Multicultural Health Network & NSW Multicultural
Health Communication Service.



வயதடையும்போது. இவை வேறு வழக்கமான குழந்தைப் பருவ நோய்தடைகளுடன் சேர்த்து கொடுக்கப்படும்.

### எனது குழந்தைக்கு நோய்தடைகள் செய்ய வேண்டுமா?

இது உங்களது விருப்பம். ஆனால் வைத்தியர்கள் இதைச் செய்யும்படி கடுமையாக அறிவுறுத்துகிறார்கள்.

### ஈரல் அழற்சி பி மருந்தூசிகள் பிரச்சினைகளை ஏற்படுத்துமா?

கடுமையான பக்க விளைவுகள் அருமை. ஆகக்கூடிய வழக்கமான பிரச்சினைகள் மருந்தூசி ஏற்றிய இடத்தில் வலி, மிதமான காய்ச்சல் மற்றும் மூட்டு வலி. நீங்கள் அக்கறைப்பட்டால் உங்களது வைத்தியரைப் பாருங்கள்.

உங்களுக்கு ஆங்கிலத்தில் தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ள உதவி தேவைப்பட்டால் மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைக்கும் சேவை (டிஸ்) ஐ 131 450 இல் அழையுங்கள்.

தொலைபேசி எண்கள் பிரசித்த போது சரியாக இருந்தது ஆனால் தொடர்ந்து சரிபார்க்கப்பட மாட்டாது. நீங்கள் தொலைபேசிப் புத்தகத்தில் எண்களைச் சரி பார்க்க வேண்டும்.

நீங்கள் கூடுதலான உடல்நலத் தகவல்கள் உங்கள் மொழியில் பல்கலாச்சார தொடர்பு இணையத்தளம் http://mhcs.health.nsw.gov.au இல் காணலாம்.